# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

### தரம் - 10 | தமிழ்மொழியும் இலக்கியமும்

பெயர் / சுட்டெண் : .....................  திரு.ச.உதயணன் M.A, PGDE

## செயலட்டை – 01

**1) சுருக்கமான விடை தருக.**

1. தமிழில் உள்ள குற்றெழுத்துக்கள் எத்தனை?
   ..........................................................................................
2. 'பார்' என்ற சொல்லை பெயராகவும் வினையாகவும் கொண்டு வாக்கியங்கள் அமைக்குக?
   ..........................................................................................
3. "எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்" என்பதில் இடம் பெற்றுள்ள அணி யாது?
   ..........................................................................................
4. "கோத்த சிந்தனையோடேகி யதில் மகிழ்கொண்டு நாட்கள் பல கழித்திட்டனன்" இவ் வாக்கியத்தின் எழுவாய், பயனிலையை எழுதுக?
   ..........................................................................................
5. 'எரி' என்பதை செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் குன்றா வினையாகவும் கொண்டு வாக்கியம் அமைக்குக?
   ..........................................................................................
6. பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
   அந்தோ அவன் நிலையைப் பாருங்கள்
   ..........................................................................................
7. "பாங்கியோடு வருவேன் என்றாள்" பாங்கி என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.
   ..........................................................................................
8. "வானம் கொட்டட்டும்" இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வியங்கோள் விகுதி யாது?
   ..........................................................................................
9. டகரம் உடன்படுமெய்யாக வருவதற்கு உதாரணம் ஒன்று தருக?
   ..........................................................................................
10. கதவு என்பது எவ்வகைக் குற்றியலுகரமாகும்?
   ..........................................................................................

**2) பின்வரும் விடையம் தொடர்பாக 250 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக**

மனிதர்களிடம் தொற்றுநோய்கள் பரவுவதற்கு அவர்கள் தமது சுய ஒழுக்கங்களை பின்பற்றாமல் தான்தோன்றித்தனமாக நடப்பதும் ஒருவகையில் காரணமாக அமைகின்றது. ஒழுக்கமுள்ள சமூகத்தின் எழுகையிலேயே உலகினது அபிவிருத்தியும் அழகும் தங்கியுள்ளது மனிதர்களிடம் சுய ஒழுக்கத்தின் மேம்பாட்டை வலியுறுத்தும் விதமான விளக்கக் கட்டுரை எழுதுக.

**3) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை 40-45 சொற்களில் அமையுமாறு சுருக்கி எழுதுக.**

இன்று உலகம் சுருங்கிச் சுருங்கி எல்லார்க்கும் எட்டுவதாகிவிட்டது. குடும்பத்தினுள்ளும் உலகம் நுழைந்துகொண்டுள்ளது. உலகம் வேறு குடும்பம் வேறு என்று எல்லை வரையறுத்தலும் அரிதாகிவிட்டது. போக்கு வரவுக் கருவிகளும் செய்தித்தாள்களும் வானொலி முதலியனவும் உலகத்தை மிகச் சுருக்கிவிட்டன. வீட்டில் ஒரு மூலையில் இருந்தவாறே பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து பேசுவோரின் பேச்சை அந்த நொடியிலே

கேட்க முடிகின்றது. நெடுந்தொலைவில் நிகழும் நிகழ்ச்சியை நிகழும் நேரத்திலேயே காணமுடிகிறது. உலகின் மூலைமுடுக்குகளின் செய்தி எல்லாம் அன்றன்றைக்கே வீட்டினுள் இருந்தவாறே தெளிவாகவும் பிழையின்றியும் செய்தித்தாள்களைக் கையிலேந்திக் கற்று அறிய முடிகிறது. இவற்றால் வீட்டின் எல்லையில் உடல் இருந்தாலும் உலகச் சூழலில் உள்ளம் வாழ நேர்கிறது. இவ்வாறு அறிவியல் முன்னேற்றம் எம்மை உலகத்தோடு பிணைத்துவிட்டது.

இதன் பயனாக விளைந்தது என்ன? பழங்காலத்தில் ஒருவன் கண்டறிந்தனவும் கேட்டறிந்தனவும் சிலருடைய இன்பமும் துன்பமுமே இக்காலத்தில் ஒருவன் காண்பனவும் கேட்பனவும் மிகப்பபலருடைய இன்பமும் துன்பமுமாகும். சிலருடைய வாழ்க்கையை மட்டும் கண்டு அவர்களுடைய இன்பதுன்பங்களை உணர்ந்த காலத்தில் மனம் பண்படும் வாய்ப்பு மிகுதியாக இருந்தது. அறிவு வளரும் வாய்ப்பு குறைவாக இருந்தது. உள்ளொன்று புறமொன்றாக நடிக்கத்தெரியாத நிலை இருந்தது. இன்பம் உணர்ந்து அமைதிபெற வாய்ப்பு இருந்தது. ஆனால் மிகப்பலருடைய வாழ்க்கையை அறிந்து அவர்களுடைய இன்ப துன்பங்களை உணரும் இக் காலத்தில் மனம் பண்படும் வாய்ப்பு குறைந்துவிட்டது. அறிவு வளரும் வாய்ப்பு மிகுந்துவிட்டது. உள்ளொன்று புறமொன்றாக நடிப்பதில் தேர்ச்சி பெற முடிகிறது. எவ்வளவு இன்ப நலன்கள் பெறினும் அமைதி கிடைத்தல் அரிதாகின்றது. பிறர் துன்பங்களைக் கண்டு உருகும் தன்மை குறைகிறது. சுருங்கக் கூறின் அக்காலத்தில் பெரும்பாலோரின் மனம் குழையும் தளிர்போல மென்மையுற்று உணர்வுருவாக இருந்தது. இக்காலத்தில் அது மிகச் சிறுபான்மையோரின் தன்மையாவிட்டது. பெரும்பாலோரின் மனம் உரமான காழ்போல வன்மையுற்று மரத்துவிட்டது.

.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

**4) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

மதியும் சூரியனும் - என்ற இரு
மாயப் பரிபூட்டி
விதியாம் தேரினிலே – காலதேவன்
விரைந்து செல்லுகிறான்.

யாரென்ன செய்தாலும் - அவனை நாம்
யாரென்ன வைதாலும்
தேரினைத் தானிறுத்தி – சற்றுமே தான்
திரும்பிப் பாரானே.

கோடி கோபுரங்கள் - தேரின் கீழ்
கோடி மாளிகைகள்
கோடி மகுடங்கள் - ஆயிரமாம்
கோடி ஆட்சிகளே

காவியம் பல்கோடி -அற்புத
ஓவியம் பல்கோடி
பாவியான் தேரினிலே – பட்டவை
பற்பல கோடி கோடி.

அ) காலதேவன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

.....................................................................................................

ஆ) காலவேனின் இயல்பு யாது?

.....................................................................................................

இ) பாடலில் உள்ள உருவக அணிகளைக் குறிப்பிடுக?

.....................................................................................................

ஈ) பாவியான் தேரிலே பட்டவை என எவற்றைக் கவிஞர் குறிப்பிடுகின்றார்?

.....................................................................................................

உ) இக் கவிதை எதனை வெளிப்படுத்துகின்றது?

.....................................................................................................

5) மக்கள் சுய உற்பத்தி முறைகளை விருத்தி செய்வதன் மூலமாக அவர்கள் தமது பொருளாதாரத்தை விருத்தி செய்துகொள்ள முடிவதோடு நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துகொள்ள முடியும். இதற்காக மக்கள் வீட்டுத்தோட்டச் செய்கைகளில் ஈடுபடுவது பொருத்தமான வழிமுறையாக அமையும். இதனை வலியுறுத்தி வீட்டுத்தோட்டச் செயற்பாட்டை மக்களிடையே ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தி பிரதேச செயலாளருக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் 100 சொற்களுக்கு குறையாது கடிதம் ஒன்று எழுதுக.

## தமிழ்மொழியும் இலக்கியமும்
## செயலட்டை – 02

**1) சுருக்கமான விடை எழுதுக.**

1. நீதிப்பாடல் என்றால் என்ன?

   ……………………………………………………………………………………………

2. விவேக சிந்தாமணி எழுந்த காலப்பகுதி யாது?

   ……………………………………………………………………………………………

3. வெற்றிவேற்கையை இயற்றியவர் யார்?

   ……………………………………………………………………………………………

4. இந்நூல் எழுந்த காலப்பகுதி யாது?

   ……………………………………………………………………………………………

5. இந்நூலுக்கு வழங்கப்படும் மறுபெயர் யாது?

   ……………………………………………………………………………………………

6. இந் நூலாசிரியரால் இயற்றப்பட் வேறு நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

   ……………………………………………………………………………………………

7. வாக்குண்டாம் என்ற நூலினை இயற்றியவர் யார்?

   ……………………………………………………………………………………………

8. இந் நூலுக்கு வாக்குண்டாம் எனப் பெயர்வரக் காரணம் யாது?

   ……………………………………………………………………………………………

9. வாக்குண்டாம் நூலுக்கு வழங்கப்படும் மறு பெயர் யாது?

   ……………………………………………………………………………………………

10. அப் பெயர் வழங்கப்படக் காரணம் யாது?

    ……………………………………………………………………………………………

11. இந் நூலாசிரியரால் இயற்றப்பட்ட மூன்று நூல்களைக் குறிப்பிடுக?

    ……………………………………………………………………………………………

12. “நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” என்பதில் நாலு, இரண்டு எனக்குறிப்பிடப்படுபவை?

    ……………………………………………………………………………………………

13. திரிகடுகம் எழுந்த காலப்பகுதி யாது?

    ……………………………………………………………………………………………

14. இதனை இயற்றியவர் யார்?

    ……………………………………………………………………………………………

15. திரிகடும் என்பதில் குறிப்பிடப்படும் மூன்று மருந்துச் சரக்குகளும் எவை?

    ……………………………………………………………………………………………

16. ‘கடுகம்’ என்பதன் பொருள் யாது?

    ……………………………………………………………………………………………

17. இந்நூலுக்கு திரிகடுகம் எனப் பெயர்வரக் காரணம் யாது?

    ……………………………………………………………………………………………

18. முதுமொழி வெண்பாவினை இயற்றியவர் யார்?

    ……………………………………………………………………………………………

19. இவர் எப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்?

……………………………………………………………………………………………

20. இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட பிற நூல்களைக் குறிப்பிடுக?

……………………………………………………………………………………………

21. நாலடியார் எழுந்த காலப்பகுதி யாது?

……………………………………………………………………………………………

22. இந் நூலினைத் தொகுத்து உரை எழுதியவர் யார்?

……………………………………………………………………………………………

23. இனியவை நாற்பது எழுந்த காலப்பகுதி யாது?

……………………………………………………………………………………………

24. இந் நூலினை இயற்றியவர் யார்?

……………………………………………………………………………………………

25. இதில் எத்தனை பாடல்கள் காணப்படுகின்றன?

……………………………………………………………………………………………

**2) பின்வரும் தொடர்களைச் சந்தி பிரித்து எழுதுக.**

1. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
   நுகரா மண்டுகம்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

2. தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
   வானுறவோங்கி வளம்பெ றவளரினும்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

3. தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

4. கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
   மூத்தோரை யில்லா வவைக்களனும்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

5. உப்பில்லாக் கஞ்சியனை யுண்ணு மறுசுவைபோல்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

6. கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
   கலப்பர் கற்றோரே.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

7. வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

.............................................................................................

.............................................................................................

8. போரெ டுத்து வரமதன் முன்செலப்

போகும் வேளை யதற்குத் தினந்தொறும்

.............................................................................................

.............................................................................................

9. யாத்த தேரு யைப்படு மேழைதான்

யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றென

.............................................................................................

.............................................................................................

10. விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்

விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே

.............................................................................................

.............................................................................................

**3) சுருக்கமான விடைகளை எழுதுக.**

1. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே.

அ) தாமரை, வண்டின் இயல்புகள் யாவை?

ஆ) புல்லரின் இயல்பு யாது?

2. அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா- மடத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

அ) மடத்தலை, உறுமீன் என்பவற்றின் கருத்து யாது?
ஆ) பாடலில் இடம் பெற்றுள்ள அணி யாது?

3. உப்பில்லா கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாரம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை.

அ) மனம் கொண்டது மாளிகை என்ற முதுமொழியின் கருத்து யாது?

ஆ) மனம் கொண்டது மாளிகை என்பரின் வாழ்வு பற்றி கூறப்பட்டிருப்பது யாது?

4. காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார் ந்து களித்திட
யாத்த தேரு யைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித் திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொ புத்துயி ரெய்துவேன்

அ) பாரதியார் தன் காதலை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

ஆ) ''யாத்த தேரு யைப்படு மேழைதான்'' என்பதில் இடம்பெற்றுள்ள அணியினைக் குறிப்பிடுக?

5. சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மானத மாகுமால்
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்
தாழுமுள்ளத்தர் சோர் வினர் ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே.

அ) மனித மனத்தின் இயல்பு யாது?

ஆ) எத்தகையவர்கள் தாம் விரும்பியவற்றை அடையமாட்டார்கள்?

6. பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' அந்தச் சபையில் நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள். தபால் தந்திக்கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்த சேர்ந்தன. ''ஒருவர் ஒருவராகவோ, இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்'' என்றார் நாவலர் அவர்கள்.

அ) பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' என்பதால் கூறப்படுவது யாது?

ஆ) நாவலரின் ஆளுமை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

**4) நீதிப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) ''ஒருவரது உருவத்தைக் கொண்டு அவரது ஆற்றலை மதிப்பிட முடியாது'' என்பதை வெற்றிவேற்கைப் பாடலைக் கொண்டுவிளக்குக?

ஆ) நல்ல நட்பு, கூடா நட்பு என்பவற்றை நாலடியார் பாடல் எவ்வாறு விளக்குகின்றது?

**நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**

அ) நாவலர் எழுந்த விதத்தினை கட்டுரையாசிரியர் வெளிப்படுத்தும் விதத்திலுள்ள சிறப்பினை விளக்குக?

ஆ) பிறிட்ரோ கட்சியினர் மேலோங்குவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களை குறிப்பிடுக?

**பாரதியார் சுயசரிதையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**

அ) காதலியின் அழகை கவிஞர் எவ்வாறு வர்ணித்துள்ளார்?

ஆ) தாம் விரும்பியவற்றை அடையமுடியமாட்டாதவர்களின் இயல்புகள் யாவை?

**5) பின்வருவனவற்றுள் யாதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) நீதிப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமையணிகளை விளக்குக.?
ஆ. நாவலர் எழுந்ததற்கு முன் பின்னான கூட்ட நிலைமைய விளக்குக?
இ) பாரதியார் தன் காதல் உணர்வினை வெளிப்படுத்தும் விதத்திலுள்ள சிறப்புக்களை எடுத்துக் காட்டி விளக்குக.

***